Kerala Gazette No. 1 dated 5th January, 2021.
**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-ஜி) துறை

அறிக்கை

எண் 10682/ச. இ. ஜி. 2/2018/சட்டம்.

2018 மே 15
திருவனந்தபுரம், 1193 இடவம் 1
1940 வைசாகம் 25.

2018-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 36

**2018-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக (செனட் மற்றும் சிண்டிகேட்டின் தற்காலிகமான மாற்றுமுறை) அவசரச்சட்டம்**

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

கேரள பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் சின்டிகேட்டை தற்காலிகமாக ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு அவசரச்சட்டம்.

முகவுரை.—1974-ன் கேரள பல்கலைக்கழக சட்டத்தின் (1974-ன் 17) நிபந்தனைகளின்படி கேரள பல்கலைக்கழகத்தின் (செனட் மற்றும் சின்டிகேட்டின் காலவரம்பு 2018 மே 16-ஆம் தேதி முடிவடைவதாலும்;

கேரள பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் சின்டிகேட்டிற்கும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது எனினும் அவை குறிப்பிட்ட காலத்திற்குள் முழுமையடைய செய்வதற்கு காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதினாலும்;

செனட் மற்றும் சின்டிகேட்டின் காலவரம்பு முடிவடையும் தருவாயில் கேரள பல்கலைக்கழக சட்டத்தின் நிபந்தனைகளின்படி செனட் மற்றும் சின்டிகேட்டை புனரமைக்க காலதாமதம் ஏற்படும் என்பதாலும்;

கேரள பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் சின்டிகேட்டின் காலவரம்பு முடிவடையும் தருவாயில், அவற்றின் அதிகாரங்களை வினியோகிப்பதற்கும் பொறுப்புகளை நிர்வகிப்பதற்கும் உடனடியாக ஒரு மாற்று ஒழுங்குமுறை கொண்டு வரவேண்டும் என்பதாலும்;

கேரள மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை தற்போது உள்ளது என்று கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால் இந்தியக் குடியரசின் 213-வது சட்ட விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன்படி வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் கேரள பல்கலைக்கழக (செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்காலிகமாக மாற்றுமுறை அமைப்பு) அவசரச்சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2018 மே மாதம் 17-ம் தேதி அமலுக்கு வருவதாகும்.

2. கேரள பல்கலைக்கழக செனட் மற்றும் சின்டிகேட்டின் அதிகாரங்களை நிர்வகிப்பதற்கும் பொறுப்புகளை நிர்வகிப்பதற்கும் தற்காலிக மாற்றுமுறை அமைப்பிற்கான சிறப்பு முறை.—(1) 1974-ன் கேரள பல்கலைக்கழக சட்டத்திலோ (1974-ன் 17) அல்லது அதன்கீழ் உருவாக்கியுள்ள ஏதேனும் சட்ட விதிகளிலோ ஒழுங்குமுறையிலோ அவசரச்சட்டத்திலோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளிலோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் விதி நியாயத்திலோ உத்தரவிலோ என்னதான் உட்பட்டு இருந்தாலும், இந்த அவசரச்சட்டத்தின் தொடக்க நாளில் அலுவலக பதவி காலவரையறை முடிவடைந்த கேரள பல்கலைக்கழக செனட் மற்றும் சின்டிகேட்டின் காரியத்தில் மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் சின்டிகேட்டின் பொறுப்புகள் துணைப் பிரிவு (2)-ன்கீழ் அரசு பெயர் பரிந்துரை செய்கின்ற ஒரு குழுமம் ஆறு மாதக் காலத்திற்கோ அல்லது 1974-ன் கேரள பல்கலைக்கழக சட்டத்தின் (1974-ன் 17) ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செனட்டும் சின்டிகேட்டும் மறு அமைப்பு செய்வது வரையில் அல்லது அதில் எது முதலில் வருகிறதோ, அது வரை பொறுப்பில் இருக்க வேண்டும்.

(2) அரசிற்கு, அரசு அறிக்கை மூலம், மேற்குறிப்பிட்ட செனட் மற்றும் சின்டிகேட்டினுடைய எல்லா அதிகாரங்களும் நடைமுறைப்படுத்துவதற்கும் எல்லா பொறுப்புகளும் நிறைவேற்றுவதற்குமாக பின்வரும் உறுப்பினர்கள் உட்பட்ட ஒரு தற்கால குழுமத்தை பெயர் பரிந்துரை செய்யப்படலாம்,-

1. சின்டிகேட்டின் எக்ஸ்-ஒபிஷியோ உறுப்பினர்கள்;

2. பெயர் பரிந்துரை செய்யப்படுகின்ற உறுப்பினர்கள்;

(i) பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு ஆசிரியர்;

(ii) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அரசு கல்லூரியிலுள்ள ஒரு ஆசிரியர்;

(iii) பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட அரசு கல்லூரிகளில் இருந்தும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இருந்து ஒவ்வொரு முதல்வர் வீதம்;

(iv) பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் இருந்துள்ள இரண்டு ஆசிரியர் பிரதிநிதிகள்;

(v) பல்கலைக்கழகங்களிலுள்ளதோ பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதோஆன அரசு அல்லது அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இருந்துள்ளதோஆன ஒரு மாணவர்;

(vi) கல்விப் பிரிவில் செயல்படுகின்ற ஆறு முக்கிய பிரமுகர்கள், அவர்களில் ஒருவர் மகளிரும் ஒருவர் அட்டவணை சமுதாயத்திலோ அட்டவணை பழங்குடியினர் சமுதாயத்தையோ சார்ந்த நபராகவும் இருக்க வேண்டும்.

பி. சதாசிவம்,<br>
ஆளுநர்.